முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 629**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

19.06.2021, சனிக்கிழமை

1. ஞான சக்தியே அரங்கா போற்றி
ஞானிகள் பலம்கொண்ட தேசிகா போற்றி
தானதர்மத்தின் உயர் நிலையாக
தரணிஎங்கும் அன்னதான சேவையாற்றி
2. ஆற்றியே அற்புதம் நிகழ்த்துகின்ற
ஆறுமுக அரங்கனே போற்றிபோற்றி
போற்றியே சுப்ரமணியர் யானும்இனிதே
புகலுவேன் அரங்கன்உமக்கு ஞான அறிவுரைஆசி
3. ஆற்றல்கூட்டி யானும் உந்தனுக்குள்ளே
ஆக்கசக்தியாய் நித்தம் இயக்கிவர
வருகின்றன் எந்தன் சக்திமூலமாக வையகத்தில்நீ உலகமாற்றம் செய்துமகிழ்வாய்
தருகின்ற உன்தர்மத்தின் மூலம் இந்த தரணியே தர்மபலம் கூடி
4. கூடியே உலக பெருமாற்றம்
குறையில்லா சடுதி காண நேரும்
நாடியே உன் வழி தீட்சை பெற்று
ஞானபலம் கொண்ட மக்களெல்லாம்
5. மக்களெல்லாம் ஆறுமுகன் என்தயவால்
மண்ணுலகில் ஞானிகளாகி சிறக்க நேரும்
ஆக்கமுடன் உன் சக்தியின் வழி
அவர்களெல்லாம் ஞான யுகமாற்றத்தில்
6. மாற்றத்தில் இனிதே பங்குகொண்டு
மாட்சிமைபட ஞானிகளாகும் வாய்ப்புகிட்டும்
தேற்றமுடன் அரங்கன் உந்தனுக்கு
திருவருளை சக்தியாக நித்தம்அருளிவர
7. வருகின்ற என் சக்தி மூலம்
வையகம் பெரும் பாதுகாப்பு பெறும்
ஆறுமுகன் என் வழிபாட்டை செய்யக்கூடிய
அனைத்து தேசங்களும் ஞானதேசமாகி
8. ஆகியே பேரிடர் காலத்திலும்
அற்புதமாய் அழிவின்றி மீட்க நேரும்
நேர்மைபட ஞானவான்கள் பெருகி
நிலவுலகே ஞான ஆட்சிக்குண்டான சூழல் கனியும்

9. கனியவே அரங்கன் என் சக்தியான
கருணைகொண்ட ஞானியே உந்தனுக்கு
துணிவுபட தொண்டர்படை பெருக்கம்இருக்க
தொடர்ந்து உன்வழிவரும் மக்கள்மூலம் இந்த அற்புதம்நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.